


மதுரை மாவட்ட தொமுச கவுன்சில் சார்பாக ஒன்றிய, மாநில பாசிச மக்கள் விரோத போக்கை கண்டித்து தலைவர் பிச்சை தலைமையில் செயலாளர் சி.கருணாநிதி ஏற்பாட்டில் மாநில துணைச் செயலாளர் ராஜகாந்தம் கண்டன உரை நிகழ்த்த தொமுச நிர்வாகிகள் கார்த்தி சுரேஷ், கூடக்கோவில் முருகன், ஜெகநாதன், ராமர், பிரபாகரன், அசோக் குமார், சத்யன், கே.பி.தங்கவேலு, ராஜேஷ் கண்ணன், ஆகியோர் முன்னிலையில் அருள்மொழி செல்வன் நன்றியுரையாற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றதில் அனைத்து தொமுச நிர்வாகிகள், உறுப்பினர்கள் என பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில் பரவி வரும் டெங்கு –

# வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை!

## காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!



இராமநாதபுரம், செப்.24-

இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவி வரும் கடுமையான வெப்பநிலை மற்றும் திடீர் மழைப்பொழிவால் ஏற்பட்டுள்ள பருவநிலை மாறுபாடு காரணமாக, பொதுமக்கள் தலைவலி, சளி, இருமல் மற்றும் வைரஸ் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து மாவட்ட நிர்வாகமும் சுகாதாரத் துறையும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவி வரும் சூழ்நிலையில், மாவட்ட சுகாதாரத்துறையும் மாவட்ட நிர்வாகமும் பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும். மேலும், பேரூராட்சிகள், நகராட்சிகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊழியர்கள் மூலம் வார்டுகளில் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை அரசு முன்னெடுக்க வேண்டும்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருபவர்களைத் தவிர, தனியார் மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகளில் மருத்துவ ஆலோசனை பெறுவதோடு அல்லாமல், போதிய விழிப்புணர்வு இல்லாமல் பொதுமக்களில் பலர் மருந்துக் கடைகளில் நேரடியாக மாத்திரைகள் வாங்கிச் சாப்பிட்டும் வருகின்றனர். இதனால் மாவட்டத்தில் காய்ச்சல் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதஅரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டெங்கு காய்ச்சல் அறிகுறிகளுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் ரத்த மாதிரி முடிவுகளின் அடிப்படையில், கடந்த 1ஆம் தேதி முதல் நேற்று வரை சிலர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது டெங்கு காய்ச்சல் பரவல் அதிகமாக உள்ளதால், மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தனிப் படுக்கைகள் கொண்ட சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட வேண்டும். அந்த வார்டுகளில் கொசு வலை, முகக் கவசம், நிலவேம்பு குடிநீர் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியதுடன், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் காய்ச்சலுக்கான சிறப்புப் புறநோயாளிகள் பிரிவைப் போன்றே, 24 மணி நேரமும் மருத்துவர்களும் செவிலியர்களும் தொடர்ந்து பணியில் இருப்பதை அரசும் மாவட்ட நிர்வாகமும் உறுதி செய்ய வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்ட சுகாதாரத்துறை, எதிர்வரும் வடகிழக்குப் பருவமழை மற்றும் பண்டிகை நாட்களை ஒட்டி வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலத்திற்குப் பயணம் செய்யும் பொதுமக்களைக் கவனத்தில் கொண்டு, பேருந்து நிலையங்களிலும் தேவையான மருத்துவ உதவிகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

டெங்கு மற்றும் பிற காய்ச்சல் நோய்களைத் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குத் துரிதமான சிகிச்சை வழங்குவதற்கும், போர்க்கால அடிப்படையில் உடனடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் ஆயத்தப் பணிகளையும் மெத்தனமின்றி விரைந்து மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உடனடியாக மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை வழங்கும் வகையில், மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் மற்றும் உயிர் காக்கத் தேவையான மருந்துகள் தயார் நிலையில் இருப்பதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும். மருத்துவப் பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப்படுவதுடன், அவர்களின் பாதுகாப்பிற்குத் தேவையான முகக் கவசம், உடை போன்ற மருத்துவ உபகரணங்களும் போதுமான அளவில் இருப்பு உள்ளதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

டெங்கு காய்ச்சல் காரணமாகத் தீவிர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்காக, மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ஐ.சி.யூ.வில் தனிப் படுக்கைகள் தயார் நிலையில் இருப்பதைச் சுகாதாரத்துறை உறுதிப்படுத்த வேண்டும்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் நோய்களுக்கான சிகிச்சைக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள், மருத்துவர்கள், செவிலியர்கள், படுக்கைகள் போதுமான அளவில் உள்ளன என்பதையும், பொதுமக்கள் காய்ச்சல், உடல் வலி, தலைவலி, வாந்தி, வயிற்று வலி, ரத்தப்போக்கு போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாடுவதற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.

எனவேலூர் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம் எல் ஏ விடுத்துள்ள அறிக்கையில் அரசையும் சுகாதாரத்துறையையும் வலியுறுத்தியுள்ளார்.




விருதுநகர் பழைய பேருந்து நிலையம் முன்பு தொழிலாளர் முன்னேற்ற சங்கம் சார்பாக மண்டல பொதுச் செயலாளர் ராஜ செல்வம் தலைமையில், விருதுநகர் மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.வி.மாடசாமி முன்னிலையில் தமிழக விஜய் அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக தொ.மு.ச. பேரவைச் செயலாளர் மகேஸ்வரி முருகன், மின்சார தொழிற்சங்க பிரிவு மண்டல செயலாளர் அண்ணாதுரை, டாஸ்மாக் பொதுச் செயலாளர் வாழவந்தான், மாவட்ட பொருளாளர் திருவேட்டை, சிவில் சப்ளை பொதுச் செயலாளர் சிவக்குமார், தொ.மு.ச. பொதுச் செயலாளர் சௌந்திரராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தேனி மாவட்ட தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில் தேனி பழைய பேருந்து நிலையம் அருகே தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் சர்க்கரை முருகன். தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது . இந்த ஆர்ப்பாட்டத்தில் தொமுச பேரவை செயலாளர் புதுக்கோட்டை வேலுச்சாமி கண்டன உரையாற்றினார் தொ.மு.ச. போக்குவரத்து தேனி மாவட்ட கவுன்சில் தலைவர் வீரமுத்து வரவேற்பு உரையாற்றினார் தொ.மு.ச. கவுன்சில் துணைத் தலைவர் திருமுருகன் தொ.மு.ச. அமைப்புசாரா மாவட்ட தலைவர் சந்திர பாண்டியன் தொமுச டாஸ்மார்க் சுந்தரபாண்டியன் சுரேஷ். ஆகியோர் முன்னிலை வைத்தனர் மற்றும் போக்குவரத்து, மின்வாரியம், நகராட்சி, மற்றும் டாஸ்மாக், துப்புரவு தொழிலாளர்கள் உள்ளிட்ட 10ற்கும் மேற்பட்ட இணைப்பு (தொ.மு.ச.) தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தினர் சுமார் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அப்போது மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேளாண் திருத்தச் சட்டங்களை ரத்து செய்யக்கோரி, விலை வாசி உயர்வு, கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டது.



தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் திருமதி.சுகன்யாவை ஆதரித்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கீதாஜீவன் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்தார். உடன் தொகுதிக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் வாக்குச் கேரிப்பு!

அச்சிறுப்பாக்கம் செப். 24-

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் திமுக கழகத்தின் சார்பில் கழகத்தின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமன் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

இதை ஆதரித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்குஉட்பட்ட அகிலி, மாத்தூர், ஊனமலை, சிறு நாகலூர் ஆகிய ஊராட்சிகளில் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்து வருகின்றனர்.

அப்போதுஅகிலி ஊராட்சியில் உள்ள பெரிய ஏரியில் 100 நாள் வேலை செய்யும் பணியாளர்கள் இடத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர், செஞ்சி மஸ்தான்தலைமையில், அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு, ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், மாவட்ட துணை செயலாளர் அமுதா ரவிக்குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன்,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பெனாசீர், எஸ்.பி.சம்பத், அர்ஷத், செல்வம்,ஒன்றிய அவைத்தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை,ஒன்றி இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி,அகிலிஊராட்சி நிர்வாகிகள் விஜயன், மார்ட்டின், விக்டர், வரதராஜன், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டுஉதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர்.

அப்போதுமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வாக்காளர்களிடம்பேசுகையில்:

மதுராந்தகத்தில் நடைபெறும் இடைத்தேர்தல் வரக்கூடாது.

ஒருவரை ஓட்டு போட்டு ஜெயிக்க வைத்தீர்கள் கையில் வைத்த மையை கூட காயவில்லை 30 நாளில் அவர் ராஜினாமா செய்து வேறொரு கட்சியில் சேர்ந்து மீண்டும் அவர்கள் வந்து ஓட்டு கேட்கிறார்கள் இது எந்த விதத்தில் நியாயம் என கேள்வி எழுப்பிய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வரும் தேர்தலில் வாக்காளர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் .

கடந்த திமுக ஆட்சியில் செய்த நன்மைகள் மீண்டும் நிறுத்தாமல் இருப்பதற்கும் இன்றைய நிலையில் திமுகவிற்கு ஓட்டு போட்டால் ஆளுகின்ற அரசாங்கம் தப்பு பண்ணாமல் இருப்பதற்கும் ஒரு கொட்டு போட வேண்டும்.

ஆளுகின்ற அரசாங்கம் தப்பு பண்ணாமல் இருப்பதற்கும் திமுகவின் திட்டங்கள் தொடர்ந்து கிடைப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் வாக்காளர்களாகிய நீங்கள் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

### மதுராந்தகம்–தாராபுரம் இடைத்தேர்தல் பணிகளுக்கான

# தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்புக் குழு!

## அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம்–தாராபுரம் தொகுதிகளில் தி.மு.க வேட்பாளர்களின் வெற்றிக்காக களத்திலும் சமூக வலைத்தளங்களிலும் பணியாற்றிடும் வகையில், கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்புக் குழுவில் பின்வரும் துணைச் செயலாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**மதுராந்தகம் தொகுதி –**

**முதன்மைப் பொறுப்பாளர் திரு.அ.தமிழ்மாறன்**

**பொறுப்பாளர்கள்–**

| | |
|---|---|
| மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் | – திரு.C.H.சேகர் |
| மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் | – திரு.அழகிரி சதாசிவம் |
| அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் | – டாக்டர் A.K.தருண் |
| அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் | – திரு.P.M.ஸ்ரீதர் |
| அச்சிறுபாக்கம் மத்திய ஒன்றியம் | – திரு.S.D.இசை |
| மதுராந்தகம் நகராட்சி | – திரு.சுரேஷ் |
| கருங்குழி பேரூராட்சி | – திரு.நவீன் |

அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி – திருமதி.பத்மப்பிரியா – திருமதி.திவ்யா சத்தியராஜ்

**தாராபுரம் தொகுதி**

**முதன்மைப் பொறுப்பாளர்– திரு.பா.கேசவன்**

| | |
|---|---|
| தாராபுரம் மேற்கு ஒன்றியம் | – திரு.விஜய கதிரவன் – திரு. பா.ச பிரபு |
| தாராபுரம் கிழக்கு ஒன்றியம் | – திரு.அ.தமிழ்மறை |
| குண்டடம் மேற்கு ஒன்றியம் | – திரு.அ.தமிழ்மறை |
| மூலனூர் மேற்கு ஒன்றியம் | – திரு.பா. ச.பிரபு |
| மூலனூர் கிழக்கு ஒன்றியம் | – திரு.மதுரை பாலா |
| ருத்ராவதி பேரூர் | – திரு.தரணிதரன் |
| மூலனூர் பேரூர் | – திரு.ராஜராஜன் |
| கொளத்துப்பாளையம் பேரூர் | – திரு.விஜய கதிரவன் – டாக்டர் அழகுராஜா |
| சின்னக்கப்பாளையம் பேரூர் | – டாக்டர் அழகுராஜா |

கன்னிவாடி பேரூர் மற்றும் வெள்ளக்கோவில் ஒன்றியம் – திரு. பா.ச.பிரபு

தாராபுரம் நகரம் – திரு.ஏ.கே.அருண்

இடைத்தேர்தல் தொகுதிகளுக்கான தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கழகத் தலைமை அறிவித்துள்ள தேர்தல் பொறுப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை
நாள்- 22.09.2026

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்,
தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி.கே. பழனிச்சாமி

## செப்டம்பர் 24 (2000)



**திருவெற்றியூர் நகரக் கழகச் செயலாளராகவும், நகராட்சி மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்.**

**'கழகத்தை உயிர்மூச்சாகக் கொண்டு ஓடியாடி உழைத்த உடன்பிறப்பு' என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

## தலைமைக் கழகம்
## தி.மு.க.